டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும்
திருத்தவும் புதிதாக வாங்கவும்
விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174



விலை: சதம் 75

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஆவணி 20 துல்ஹஃ 5 இதழ் 203
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 5 9-1981



தரத்தினில் சிறந்த
மான் - முயல் - வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஒடுகளையே
பாவியுங்கள்
மு.தா.பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்
போன்: 7493


★நாட்டில் நிகழ்ந்த வன்செயல்கள்

# அரசஎம்.பிக்களின் உரைகளும் தூபமிட்டிருக்கலாம்!

## ஜனதிபதி கண்டனம்

### புஞ்சிநிலமேக்கு விளக்கம் அளிக்க மறுப்பு

(கொழும்பு)

"அண்மையில் நாட்டின் பல பகுதிகளிலும் இடம் பெற்ற வன்செயல்களுக்குத் தூபமிடும் விதத்தில் ஐக்கிய தேசியக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பாராளுமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் ஆற்றிய உரைகளும் காரணமாகவிருந்திருக்கும்" என்று ஜனதிபதி திரு.ஜே ஆர். ஜெயவர்த்தன இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நேற்றுநடைபெற்ற ஐ. தே. கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கண்டனம் தெரிவித்தார்.

செயற்குழுக் கூட்டத்தில் ஜனதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"அண்மையில் நடைபெற்ற வன்செயல்களை எமது கட்சித் தலைவர்களின் எந்தத் தலைவராவது கண்டித்தீர்களா? மக்களுக்கு உதாரணமாக நீங்கள் நடந்து காட்டினீர்களா?

"ஒருவர் பெரிய அரசியல் கட்சியின் தலைமைப் பதவியை வகிப்பதையிட்டு பெருமைப்படவேண்டும். அல்லது கட்சியிலிருந்து விலகவேண்டும்.

"தீவைப்பு, கொலை, கொள்ளை, கற்பழிப்பு ஆகியவற்றால் தான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென்று யாராவது கருதினல் அவர்கள் கட்சித் தலைமையை ஏற்கட்டும்.

"அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் தனிய அரசியல் கட்சி சம்பந்தப்பட்டதல்ல. இது வருங்கால மக்களுடனும் சம்பந்தப் ட்ட விடயமாகும் இக்கூட்டத்தில் நான் மிகுந்த கவலையுடன் உரையாற்றுகின்றேன்.

இந்நாட்டு மதக்கொள்கைகளை சரியான முறையில் பின்பற்றாததால் தான் இத்தகைய வன்முறைச்சம்பவங்கள் நடைபெற்றன" என்று தெரிவித்தார்.

இச் செயற்குழுக்கூட்டத்தில் இரத்தினபுரி எம். பி. திரு. புஞ்சிநிலமே தனிப்பட்ட விளக்கமொன்றை அளிக்க இடமளிக்குமாறு ஜனதிபதியிடம் கேட்டபோது, அதற்கு இடமளிக்க ஜனதிபதி மறுத்துவிட்டார். (ம-வெ)

## 15 பேர் கைது

சென்னை, செப். 4

இலங்கை தமிழ்மக்களுக்கெதிராக அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து சென்னையிலுள்ள இலங்கை உதவி தூதுவரின் அலுவலகத்திற்கு முன்பாக மறியல் போராட்டம் செய்த தி. மு. க. தொண்டர்கள் 15பேர் இன்று தமிழ்நாடு அரசினல் கைதுசெய்யப்பட்டனர். (வெ)

## ஹர்த்தால் ஒத்திவைப்பு

சென்னை, செப். 4

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக தமிழ்நாடு முழுவதும் அனைத்துக்கட்சிகளினலும் இம்மாதம் 8ம் திகதி மேற்கொள்ளப்படவிருந்த ஹர்த்தால் இம்மாதம் 12ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவலை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் சென்னையில் இன்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

"நாகபட்டினத்தில் வேளாங்கண்ணியின் திருவிழா தற்பொழுது நடைபெற்று வருவதாலேயே ஹர்த்தால் பின்போடப்பட்டிருக்கிறது" என்று அவர் விளக்கிக் கூறினர். (வெ)

சிறை அதிகாரியிடம் காரணம் கோரப்படும்

## ரிமாண்டிலிருந்த பொலிஸார் தடுப்பு முகாமுக்கு மாற்றம்

### சட்டத்தரணிகள் ஆட்சேபம்: சட்டமாஅதிபரிடம் ஆலோசனை பெறமுடிவு

[ நமது நிருபர் ஏ.வி. மாணிக்கம் ]

(யாழ்ப்பாணம்)

பொய்ச்சாட்சியம் சிருஷ்டித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில், ரிமாண்டில் வைக்கப்பட்ட இரு சந்தேக நபர்களான பொலிசார் யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்படவில்லை. சந்தேக நபர்கள் இருவரும் பாதுகாப்பு அமைச்சரின் கட்டளைப்படிசிறைச்சாலையிலிருந்து தடுப்புக்காவல் முகாமுக்கு எடுத்துச்செல்லப்பட்டதாக உதவிப் பொலிஸ் அதிபர் தெரிவித்தார். இதனை சந்தேகநபர்களின் சட்டத்தரணிகள் ஆட்சேபித்தனர். இதைத் தொடர்ந்து சட்டமாஅதிபரின் ஆலோசனை பெறுவதற்கு ஒருவாரகால அவகாசம் வழங்கியதுடன், இன்று சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாததற்கு சிறைச்சாலை அதிகாரி காரணம் காட்ட, அறிவித்தல் அனுப்புமாறு நீதவான் கட்டளையிட்டார்.

யாழ் நீதிமன்றத்தில் நீதவான் ரி. யோகநாதன் முன்னிலையில் இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சுன்னகம் பொலிஸ்சார் ஜன்டாகக் கடமையாற்றிய வேலாயுதபிள்ளை, ரிசேவ் பொலிசாகக் கடமையாற்றிய இரகுநாதன் ஆகியோர் மீது பொய்ச்சாட்சியம் சிருஷ்டித்த

[6-ம் பக்கம் பார்க்க]


சாப்பாடோ, சாப்பாடோ என சுவைத்து மகிழும் சைவ உணவுப் பிரியர்களுக்கு
நகரில் நாகரிக சைவ உணவகம்
அமுதசுரபி
408, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
யாழ். பஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள உணவு விடுதி
நவீன வசதி கொண்டது

# வரி விளம்பரம்

### தேவை

இனிப்பு வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். அன்னை கொம்பக்ஸனரி வேர்க்ஸ், இளவெட்டி. 0831

G. C. E. O/L வரை படித்த மாணவ மாணவிகள் விற்பனையாளராகப் பணிபுரியத் தேவை. மாநகர சபைக்கு மிக அண்மையில் உள்ளவர்கள் கிட்டும் நற்சான்றுப் பத்திரத்துடன் தொடர்பு கொள்ளவும். ஞானசுரபி புத்தகக் கம்பனி, 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 0843

### தவறிவிட்டது

நாவடிப் பாடசாலைக்கும் தாவடிச் சந்திக்குமிடையில் பாவிக்கப்பட்ட இரண்டு பிலிம்ரோல் பார்சல் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். ஸ்ரீ கணேசா ஸ்ரோர்ஸ், தாவடிச் சந்தி. 0833

### விற்பனைக்கு

மிருசுவிலில் கந்தோடைக் கோவிலுக்கும் கண்டி ரோட்டுக்கும் அருகாமையில் குடியிருப்புக்கு உகந்த 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். வி. யேசுசேப், ரெவிபோஸ் சந்தோர், பளை. 0805

கோப்பாய், இருபாலையில் மின்சாரம், பைப் வசதிகளைக் கொண்ட பெரிய வீடுவளவு விற்பனைக்குண்டு. ச. துரைரத்தினம், 50, பாரதி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 0840

நல்ல நிலையில் உள்ள New Remington தமிழ் தட்டெழுத்து இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. செ. கனகசிங்கம், 115, ஆனந்தன்வடலி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 0839

### விற்பனைக்கு

பாவித்துக் கழித்த 45 கலன் வெற்று டிரம்கள் விற்பனைக்கு உண்டு. மில்க்வைற், யாழ்ப்பாணம். 0825

கல்வயல் பழைய பாடசாலை ஒழுங்கையில் நான்கு பரப்பு குடியிருக்கக்கூடிய காணி விற்பனைக்கு உண்டு. (பயன்தரு மரங்களுண்டு) விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் வை. கோவிந்தசாமி, பெரியரசடி, சமித்தரவை, சாவகச்சேரி. 0799

வெற்று பரல் 45 கலன் 17) விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0846

நல்லின கறவை - பசு விற்பனைக்குண்டு. கிழமை நாட்களில் நேரில்பார்வையிடலாம். அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனார்மடம், சுன்னாகம். 6757

### பயிற்சி

றேடியோ - டெலிவிசன், ஏயர் கொண்டிசனிங், வெல்டிங் முன்றுமாத டிப்ளோமா பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 10-9-81 வரையும் சேரலாம். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0838

ஒருவருட முழுநேர விவசாய பயிற்சி 17-25 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கு சாதாரண-போதனா பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன. இரு வேதனம் வழங்கப்படும். உழவு இயந்திரப் பயிற்சி அளிக்கப்படும். வெளி மாவட்ட மாணவர்களுக்கு விடுதி வசதியுண்டு. விண்ணப்ப முடிவுதிகதி 12-9-81. அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனார்மடம், சுன்னாகம். 6756

### SERVICE

A firm of Secretaries based in Colombo having its branch office in Jaffna, offers its services to Private and Public Limited Liability Companies Those who are interested in securing their services, please write to The Director/Secretary P. O. Box 123, Colombo 0802

# வலி. மேற்கில் திருட்டு

## அதிகரிப்பு

(சுழிபுரம்)

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பண்ணாகம் 5ம் கிளையில் இரவு நேரத்தில் ஓடு பிரித்து ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட துணி வகைகள் மற்றும் பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. இதன் அருகாமையிலுள்ள நெசவுசாலையிலும் ரூபா ஐயாயிரம் பெறுமதியான புடவைகளும் திருட்டுப் போயுள்ளன.

இதே போல் சில தினங்களுக்கு முன்னர் சுழிபுரம் இராமசபைக்கு அருகாமையிலுள்ள நெசவு நிலையத்திலும் சித்தன்கேணிப் பிள்ளையார் கோவில் முன்பாகவுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையிலும் புடவைகள் களவாடப்பட்டுள்ளன.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இராக் காவலர்கள் இருந்தும் இக் களவுகள் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்துறைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஈ)

## திருத்தம்

### பிஸ்கால் விற்பனை

வழக்கு இலக்கம்: காசு. க /762 3-9-81-ந் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரமான மேற்படி விற்பனை விளம்பரத்தில் "சங்கரப்பிள்ளை தவரத்தினராசவேல், புத்தூர் காலஞ்சென்ற வல்லிபுரம் கந்தபபிள்ளை" என்று இருத்தல் வேண்டும். காலஞ்சென்ற வல்லிபுரம் சுந்தரம்பிள்ளை என திருத்தல் தவறாகும்.

தா. குலஞானம்.
பிஸ்கால், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
0818

உ

# அந்தியேட்டி அழைப்பு

## ஸ்ரீமான் சின்னப்பு நாகலிங்கம்



அன்புடையீர்;

ஸ்ரீமான் சின்னப்பு நாகலிங்கம் அவர்களின் மரணச்சடங்குகளில் நேரில் பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் நன்றிகூறுகிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை இன்று 5ம் திகதி சனிக்கிழமை காலை கீரிமலை புனிதஸ்தலத்திலும், வீட்டுக்கிருத்தியம் நாளை 6ம் திகதி பகல் அன்னாரது ராஜபவன இல்லத்திலும் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
அன்பு மனைவி, மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
அன்புடன்
சுன்னாகம் உதயம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர்
நாகலிங்கம் குணரத்தினம்
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். 0845

# மங்கலத் திறப்புவிழா

இன்று (5-9-81) காலை

## "பெமிலி சொப்"

## "Family Shop"

(யாழ். கனகரத்தினம் (ஸ்ரான்லி) கல்லூரிக்கு அருகாமையில்)

★ அரியாலை, கச்சேரிப்பகுதி மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

★ உங்கள் குடும்பத்துக்கு அன்றாடம் தேவையான சகல பொருட்களையும் பாடசாலை உபகரணங்களையும் உங்கள் வீட்டுக்கருகாமையில் நகரவிலையில் மலிவாகப் பெற்றுக் கொள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

## "பெமிலி சொப்"

425, (793) நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
0819

உ

திரு முருகா சரணம்



# செல்வச் சந்நிதியில் திருப்பூங்காவனம்

## 10-ம் திருவிழா

இடம்: தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயம்.
காலம்: 07-09-1981 திங்கள்.
நேரம்: காலை 7 மணிமுதல் பகல் 12 மணிவரை

புகழ்பெற்ற இந்திய இலங்கை வித்துவான்களான

தவில்: நாச்சிமார் கோவில் கணேசன் செற், N. R சின்னராஜா செற், யாழ். சின்ன பழனிவேல் செற், கைதடி K. பழனி செற், தேரெழுந்தூர் ராசரட்ணம் செற்

நாதஸ்வரம்: கோண்டாவில் பஞ்சமூர்த்தி கானமூர்த்தி செற் மாயவரம் D R.M. மோகன் சிவராஜ், பந்தர நல்லூர் தட்சணாமூர்த்தி, அபிராமி கணேசன்

இவர்களின் சங்கமித்த இசையில் திருமுருகன் வீதி உலா வந்து பூங்காவனத்தில் ஊஞ்சலாடும் காட்சி கண்டு அவன் அருள் பெற்று ஏகுமாறு அன்புடன் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

## "குமாரன் டூரிஸ்ட் இன்"

(திரு. திருமதி எட்வேட் தங்கவடிவேல் ராஜ்குமார்)
திருமதி. T. யோகநாயகி
யோகநாயகி சினிமா
வல்வெட்டித்துறை

67, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7753
குறிப்பு: விசேட போக்குவரத்துச் சேவைகள் குடாநாடு பூராவும் உண்டு. 0832

நுணாவில் வீரபத்திரர் ஆலய பரிபாலன சபை

## அதிஷ்டலாபச் சீட்டு முடிவுகள்

முதலாவது பரிசு 257
இரண்டாது பரிசு 80
மூன்றுவது பரிசு 2889
நான்காவது பரிசு 465
ஐந்தாவது பரிசு 2718

பரிசுக்கு உரியவர்கள் ஆலயபரிபாலன சபை செயலாளரிடம் ரிக்கற்றுக்களைச் சமர்ப்பித்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

வி. மார்க்கண்டு.
0847 செயலாளர்.

# அடம்பனில் இன்று இளைஞர் விழா

(மன்னார்)

அடம்பனில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஆதரவில் இன்று இளைஞர் விழா நடைபெறுகிறது.

தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறும் இவ்விழாவிற்கான சகல ஏற்பாடுகளையும் மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலர் ஜனாப் ஏ. சி. ஏ. கபூர் மேற்கொண்டு வருகிறார். (அ)

கட்டைவேலி- நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்

# பதவி வெற்றிடங்கள் நிரம்புதல்

கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

| பதவி | வயது |
|---|---|
| 1. பொதுமுகாமையாளர் தரம் 111 | — 35—50 (ஆண்கள் மட்டும்) |
| 2. கணக்கு எழுதுநர் தரம் 11 | — 25—40 |
| 3. பொது எழுதுநர் தரம் 111 | — 25—40 |
| 4. கிளைறைப் பண்டசாலை முகாமையாளர் தரம் 111 | — 21—40 (ஆண்கள் மட்டும்) |
| 5. விற்பனை உதவியாளர் தரம் 11 | — 21—40 |
| 6. விற்பனையாளர் தரம் 111 | — 18—30 |

சேவையில் உள்ளவர்களுக்கு வயதுக் கட்டுப்பாட்டு விருந்து விதிவிலக்கு அளிக்கப்படும். சங்கச் சேவையில் உள்ளவர்களுக்கும், சங்கத் தொழிற் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி பதவிகளுக்கான தகைமைகள் பற்றிய விபரங்களை சகல ப. நோ. கூ சங்கக் காரியாலயங்களிலும் முன்னை 12-05-1972 ந் திகதிய 15, 009/12 ம் இலக்க வர்த்தமானியில் பார்வையிடலாம். சம்பளம் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 24-12-80 ஆம் திகதிய 102/80 இலக்கமிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கமைய வழங்கப்படும்.

ஒரு பதவிக்கு ஒரு விண்ணப்பம் என்ற அடிப்படையில் சங்கத்தில் ரூபா 1-00 செலுத்திப் பெறும் விண்ணப்ப படிவத்தில் மாத்திரமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபால் மூலம் 25-09-81-ந் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக "தலைவர், கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி" என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு சங்கக் காரியாலயத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

கே இராமலிங்கம்
பதில் பொதுமுகாமையாளர்,

கரவெட்டி,
29-08-81. 0800

### மணிவாக்கு

மனிதன் மீது சொரியும் பொருள் சேராத புகழானது பொய்ம்மை பேசுதலிலும் பொல்லாதது.

—அருள்விருந்து

# நமது நோக்கு

## மீளாய்வுக்குரிய விடயம்

பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்ற பலர் முன்னெவ்வாறில்லாத மாதிரி இடைநடு இறுதிச் சோதனைகளில் பலமுறை தவறுகின்றனர்.

தாங்கள் தெரிவு செய்த பீடங்களின் படிப்புமுறையைச் செவ்வனேயே பூர்த்தி செய்ய ஆற்றலற்றவர்களாக சிலர் திண்டாடுகின்றனர் என்ற முறைப்பாடு இன்று பகிரங்கமாய் விட்டது.

பீடத்தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர் பெற்றோருங்கூட இந்தப் பகிரங்க இரகசியத்தை பகிர்ந்து கொள்கின்றனர்.

தகைமை அடிப்படையைக் கைவிட்ட காலம் தொட்டு பல மாணவர்கள் பல பீடங்களுக்கு தகுதியற்றவர்களாக மிகச் சிரமத்துடன் பட்டப் படிப்பை முடித்திருக்கின்றனர்.

பொறியியல், வைத்தியம் போன்ற தொழிற்றிறமை கொண்ட பட்டப்படிப்புகள் எவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது இன்று வெளியேறிய இன்னும் வெளியேறும் பட்டதாரிகளின் சேவையைக் கொண்டே கணிக்கப்படும். அது ஒருபெரும் கேள்விக்குறி!

மாவட்ட அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு பல்கலைக்கழகத்தில் நுழையும் மாணவன் ஏதோ ஒரு காலத்தில் வைத்தியனாகவும், பொறியிலாளராகவும் வெளியேறுவது தவிர்க்கமுடியாது. அவரை மணக்கவிருக்கும் பெண்மணியும் நம்பிக்கையாகக் காத்திருக்கலாம். ஆனால் நாட்டின் அபிவிருத்திச் சேவைக்கு இத்தகைய சிறப்புப் படிப்பு எவ்வளவு தூரம் உதவுமென்பது கணிக்கமுடியாததொன்று.

இந்த அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் பலர் படிக்கும்போதே பலதடவைகளில் விழுந்தெழும்புகின்றனர். அளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தை உபயோகிக்கும் ஆற்றலற்றவர்களாகக் காணப்படுகின்றனர். சிலர் மனநோயால் பாதிக்கப்பட்டு படிப்பையே கைவிடவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

ஆட்சியாளருக்கும் அரசியல் வாதிகளுக்கும் பின்தங்கிய மாவட்டங்களில் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புக்கள் செவ்வனே நடைபெறும் பாடசாலைகளை உருவாக்குவது கடந்த இருபது வருடங்களாகக் கடினமாயிருந்துவருகிறது. எனவே ஒரு பேனாவின் குறிப்பால் அனுமதி முறையை மாற்றி பெற்றோரின் ஆதரவைப் பெறுவதும் கட்சிக்கு பலம் தேடுவதும் சுலபமாகிறது.

சுமார் 12 வருடங்களுக்குப்பின் [illegible]ன் தங்கிய மாவட்டங்கள் அந்த நிலையிலே தத்தளிக்க, அப்பின்தங்கிய நிலையையே காரணமாகவைத்து தகுதியற்ற மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதிபெற்று அங்கு சென்று புரக்கமுறிக்கிறார்கள்! பாவம்!

இந்த நாடறிந்த கசப்பான நிலையை மாற்றி அமைக்க முடியாதா? 'கசப்பு' என்னும்போது சட்டம் அரசின் நடவடிக்கைகளுக்கு விசாலமான அளவிற்கு விரிந்துகொடுத்தாலும், சாதாரண அறிவுடைய மக்கள், பரீட்சார்த்திகள், வருடாவருடம், தங்கள் திறமைக்கு 30 வீதமே மதிப்புக் கொடுக்கப்படுமென்றால் அது அகில இலங்கை போட்டிப் பரீட்சையென்று எவ்வாறு கூறலாம்?

நாட்டுக்கு இதனால் இரண்டு தீமைகள்: ஒன்று திறமையுடைய மாணவர் [பரீட்சை அடிப்படையில்] தெரிவு செய்யப்படாது தெருவில்நிற்க திறமையற்ற மாணவர்கள், அதே காரணத்துக்காக மாவட்ட, பின்தங்கிய பிரதேச அடிப்படைகளில் தெரிவுசெய்யப்படுகிறார்கள். இது மாணவர்களுக்கு அநீதி.

இரண்டு; திறமைசால் பட்டதாரிகள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள், கணக்காளர்கள், இன்னும் பல தொழில்நுட்ப வல்லுனர் உருவாக்க இயலாத தெரிவு முறையில் தகுதி உடையமாணவர்கள் மனமுடைந்து கீழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் தீங்குக்கு உற்பத்தித்தளம் இது.

நாட்டின் அபிவிருத்திச் சேவைகளுக்கு இந்தமுறை பெரும் நட்டம், ஆனால் இன்றைய குழப்பு சூழ்நிலையில் இதனை அரசு பொருட்படுத்தமுடியாதிருக்கிறது.

பெரும்பான்மை சிங்கள மாணவர்கள்கொண்ட நாட்டில் சிறுபான்மையாகிய தமிழர்கள் பட்டப்படிப்பிலும் உயர் தொழில்களிலும் முதலிடம் வகுத்தகலாம் என்றுமிருக்கவேண்டுமென்று எண்ணுவது மடமை.

ஆனால் மாவட்ட அடிப்படையிலும், பின்தங்கிய பிரதேச அடிப்படையிலும் தெரிவுசெய்யப்படும் பெரும்பகுதி மாணவர்கள் சிங்கள மூலம் படித்தவர்களே!

இவர்களின் தரத்தை உயர்த்த அரசு ஆவன செய்யவேண்டும். திறமையுடைய மாணவர்களைத் தெரிந்தெடுத்து நகரங்களிலுள்ள பிரபல பாடசாலைகளுக்கு புலமைப் பரிசு வழங்கி அனுப்பவேண்டும்.

எல்லாவகைகளிலும் கடும் போட்டிப் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் -நாட்டின் வடித்தெடுத்த முதல்வடி- உண்மையான முடிவையே எதிர்பார்க்கின்றனர். பரீட்சையின் முடிவை எவ்விதத்திலும் மாற்றியமைப்பது தேசிய தர்மத்துக்கு முரணானது.

இன, மத, மொழி வேறுபாடு எதுவுமின்றி தகுதி அடிப்படையில் ஊழல் எதுவும் இடம்பெறாத பரீட்சையில் உரிய இடங்களுக்கு ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரித்தாகவேண்டும்.

இந்த நிலை நடைமுறையிலிருந்தபோது எவ்வித குழப்பமும் நேரிடவில்லை. இன்னும் இந்த அநீதி மாணவ உலகத்தை தீவிரமாகப் பாதிக்கிறது. இதற்கொரு விவேகமான, சமத்துவ புத்தி கொண்ட முறை உருவானால் பல தீமைகள் தானாகஒழியும்.

# இலங்கையில் இந்திய இனத்தின் பாதுகாப்புக்கு அரசு பொறுப்பு

### திருச்சியில் தொண்டமான் தகவல்

மதுரை, செப். 4

இலங்கையில் குடியேறியுள்ள இந்தியத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கான சகல பொறுப்புக்களையும் இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இவ்வாறு இலங்கை கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் திருச்சியில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இலங்கையில் இப்போது நிலைமை சீரடைந்துள்ளது என்றும் கலவரங்களினால் உடைமைகளை இழந்தவர்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்கத் தீர்மானித்துள்ளது என்றும் திரு. தொண்டமான் கூறினார்.

கலவரங்களின்போது தோட்டப்பகுதியில் அச்சம் காரணமாக பொதுமக்களால் விட்டுச் சென்ற சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் திரு. தொண்டமான் கூறினார். (இ)

## தெய்வாதீனமாக உயிர் தப்பினர்

(உடுப்பிட்டி)

யாழ்ப்பாணத்திலிருந்து நெல்லியடியை நோக்கி வந்துகொண்டிருந்த மினி பஸ்ஸும் யாழ். பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றும் நடு வீதியில் மோதி விபத்துக்குள்ளாகின.

நவிண்டில் நாவலன் மடத்தடியில் யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில் இவ் விபத்து கடந்த வியாழக்கிழமை நடந்தது.

மினி பஸ்ஸில் பிரயாணம் செய்த பிரயாணிகளும் சாரதியும் தெய்வாதீனமாக எதுவித காயமும் இன்றி உயிர் தப்பினர். மினிபஸ்ஸின் முன் பக்கம் பலத்த சேதத்துக்குள்ளானது.

நடுவீதியில் இவ் விபத்து இடம்பெற்றதால சிலமணி நேரம் நெல்லியடி - யாழ். வீதியில் போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன. (அ)

## 'தமிழ்மக்களின் நியாயமான உரிமைகளை மதித்தவர்'

### அமரர் 'விக்கி' பற்றி 'வித்தி'

(யாழ்ப்பாணம்)

''தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளுக்காக எந்தக் கட்டத்திலும் அவர்கள் பக்கம் நின்று தார்மீக உதவி புரிந்து வந்தவர் டாக்டர் விக்கிரம சிங்கா'' என்று யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் எஸ் ஏ விக்கிரம சிங்காவின் மறைவு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் தமது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

''ஆரம்ப காலத்திலிருந்தே இடதுசாரிக் கருத்துக்களுக்காக குறிப்பாக சோஷலிசக் கொள்கைக்காக உழைத்துவந்த பெருமகனான விக்கிரமசிங்கா இன, மத அணுகல் முறையைவிடுத்து இந்த மண்ணில் வாழும் சகல மக்களும் சகல சௌகரியங்களையும் பெற்றுப் பெருவாழ்வு வாழலாம் என உழைத்தவர்.

யாழ்ப்பாண மக்களின் கல்வி வளர்ச்சியில் பெருமதிப்புக் கொண்டவர். அண்மையில் அன்னாரது 81 வது பிறந்ததின விழா யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபொழுது சகல தமிழ் மக்களும் ஒன்று சேர்ந்து அவரைக் கௌரவித்தது ஒன்றே தமிழ் மக்கள் அவர்மீது வைத்திருந்த பெருமதிப்பையும் நம்பிக்கையும் சுட்டிக்காட்டப் போதுமான சான்றாகும். (மா)

## நாளாந்தம் 8 இளைஞர் பலி!

(மாத்தறை)

''மோட்டார் சைக்கிள் விபத்தினால் தினம் எட்டு இளைஞர்கள் பலியாகின்றனர்''

இவ்வாறு தென் மாகாண தேசியஇளைஞர் சேவைக்கமிட்டி இயக்குநரான திரு. குணபால கன்கொடகம, மாத்தறையில் போக்குவரத்துப் பயிற்சி வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார். (இ)

### --இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட--

# தோட்டத் தொழிலாளருக்கு நெதர்லாந்து ஐ. நா. நிறுவனங்கள் உதவி

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்ற இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு உதவி வழங்க ஐக்கிய நாடுகள் சபை முகவர் நிலையங்களும் நெதர்லாந்தும் முன்வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு உணவு, உடை ஆகியவற்றை வழங்க 'யுனிசெவ்' நிறுவனம் 1லட்சத்து 50 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கியுள்ளது. சேதமடைந்த லயன்களை மீண்டும் கட்டிக்கொடுக்க நெதர்லாந்து அரசாங்கம் முன்வந்துள்ளது.

இந்த உதவித்திட்டத்தின் கீழ் பறிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உடனடியாக 50- ரூபா வழங்கப்பட்டது.

இத்தகவல்களை பெருந்தோட்டக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்தலைவர் திரு. செனதீரத்லைத்தை தெரிவித்தார்,

தோட்டப்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களினால் 3500 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் இவ்வாண்டு தேயிலை உற்பத்தியில் 10 லட்சம் கிலோ குறையும் என்றும் லயன்கள் சேதப்பட்டதால் 23 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது என்றும் அவர் கூறினார். (இ)

## பாராட்டு விழா

(புலோலி)

அல்வாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கமும், திக்கம் மத்திய சனசமூக நிலையமும் இணைந்து நீதி அமைச்சினால் அண்மையில் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்ட இளைப்பாறிய உதவி விலைக்கட்டுப்பாட்டு உதவி ஆணையாளர் திரு. கே எஸ். வல்லிபுரத்திற்கு இன்று கிராம அபிவிருத்தித் தலைவர் திரு. கே வி. தங்கராசே தலைமையில் பாராட்டு விழா ஒன்று நடைபெறுகிறது. (இ)

### ''அபிவிருத்திசபை மூலம்

# கிராம அபிவிருத்திக்கு ச. ச. நிலையங்கள் உதவவேண்டும்''

(உடுப்பிட்டி)

''மாவட்ட அபிவிருத்திசபை மூலம் கிராமப்பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சனசமூக நிலையங்கள் முக்கிய பங்கெடுக்க வேண்டும். சனசமூக நிலையங்கள்போன்ற சமூக சேவைஸ்தாபனங்களின் வளர்ச்சியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அக்கறைகாட்டவேண்டும்.''

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதி சனசமூக நிலையங்களின் சமாஜத் தலைவர் திரு. எம். கணேசலிங்கம் அல்வாய் வடக்கு மகாத்மா சன சமூக நிலையப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலையத் தலைவர் திரு. கே தங்கவடிவேல் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு கணேசலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''கிராமப் பகுதிகளில் நிலவும் குறைபாடுகளைக் களைவதற்குக் கிராம மக்களே முயற்சிகளைமேற்கொள்ளவேண்டும். கிராம மக்களின் பொருளாதாரம் வாழ்க்கைத்தரம் என்பன சிறப்படையும்போதே கிராமங்கள் அபிவிருத்தி அடையும்.

''கிராமப் பகுதிகளை அபிவிருத்தி செய்வது கிராம மக்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கு சன சமூக நிலையங்கள் பலவேறுவகையான திட்டங்களைச் செயற்படுத்த முன்வரவேண்டும் கிராமங்கள் தோறும் சிறுகுடிசைக் கைத்தொழில்களை உருவாக்குவதன் மூலம் கிராமங்களில் வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்த முடிவதுடன் அவர்களுக்கு வருமானத்தைத் தரக்கூடிய முறைகளையும் ஏற்படுத்தமுடியும்'' இவ்வாறு அவர் கூறினார். (அ)

## ஜே. ஆர் பிரேமா அனுதாபம்

(கொழும்பு)

ஈரானில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பலியான ஈரானிய ஜனாதிபதி ஜனாப் மொகமட் அலி ரஜாயின் மரணம் குறித்து ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அனுதாபச் செய்தி ஒன்றை ஈரானுக்கு அனுப்பியுள்ளார்.

இதேபோன்று அக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பலியான ஈரானிய பிரதமர் ஜனாப் முகமட் ஜவாட் பஹோனாரின் மறைவு குறித்து பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவும் அனுதாபச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார், (இ)

## மீசாலை வடக்கில் பஞ்சாயத்துச் சபை

(சாவகச்சேரி)

மீசாலை வடக்கில் பஞ்சாயத்துசபை ஒன்றை ஆத்மஜோதி முத்தையா நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். (க)

எகிப்திய அதிபர் சதாத்துக்கு எதிரான

# முஸ்லிம் இயக்கத்தினர் 550 பேர் கைது!

## கிறிஸ்தவ - முஸ்லிம் கலவரங்களை தூண்டினாராம்

கெய்ரோ, செப். 4
எகிப்திய அதிபர் அன்வர் சதாத்துக்கு எதிரான இயக்கம் ஒன்றைச் சேர்ந்த 550 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் சகோதர இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள் வழக்கறிஞர்கள் ஆகியோரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் எகிப்திய ஜனாதிபதி நாஸரின் நெருங்கிய நண்பரான ஜனுப் முகமட் ஹெய்க்கல் என்பவரும் முன்னாள் அமைச்சர் ஒருவரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எகிப்தில் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே அண்மையில் கலவரத்தை தூண்டிவிட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

ஜனுப் சதாத்துக்கு எதிரான கொள்கையுடைய முஸ்லிம் சகோதர இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 100 பேரே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### பிரதமர் பெகின் எகிப்து விஜயம்

கெய்ரோ, செப் 4
இஸ்ரேலியப் பிரதமர் திரு. மெனசெம் பெகின், எகிப்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டுள்ளார்.

அலெக்சாந்திரியா விமான நிலையத்தில் வந்திறங்கிய பிரதமர் பெகினுக்கு எகிப்திய அணுப்புக்களின் அணிவகுப்பு மரியாதைகள் அளிக்கப்பட்டன. இவ்விஜயத்தினால் மத்தியகிழக்கின் அண்மைக்காலப் போக்கில் பல முக்கிய திகழ்வுகள் தோன்ற சந்தர்ப்பமேற்படலாமென ராஜதந்திர வட்டாரங்கள் ஊகம் தெரிவித்துள்ளன.

### ரஷ்யாவில் உளவுவேலையில் ஈடுபட்டாராம்

மாஸ்கோ, செப். 4
அமெரிக்க மத்திய உளவறியும் ஸ்தாபனத்திற்காக சோவியத்யூனியனில் உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டில் சோவியத் பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ)

### 5 ஆயிரம் ஈரானியர் கொலை

பக்தாத், செப் 4
அண்மைக்காலத்தில் நடந்த ஈராக் - ஈரான் போரில் 5 ஆயிரம் ஈரானியர்களை ஈராக் வீரர்கள் கொன்றுள்ளனர் என ஈராக் தெரிவித்துள்ளது.

இக்கூற்றை மறுத்துள்ள ஈரான் அந்தப் போரில் ஈரானிய வீரர்கள் 400 ஈராக்கியர்களைக் கொன்றுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர். (இ)

### 150 மாணவர் கைது

சென்னை, செப். 1
கோயம்புத்தூரில் இரு கல்லூரிகளின் கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற மோதலையடுத்து 150 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (இ)

### ஐ. நா. சபைக் கூட்டம் ஒத்திவைப்பு

நியூயோர்க், செப் 4
நமீபிய விவகாரம் குறித்து ஆராய்வதற்காக நேற்றுக்கூடிய ஐ. நா. பொதுச்சபை 15நிமிடங்களின் பின் ஒத்திவைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தென்னாபிரிக்கா கலந்து கொள்ள முயன்றபோதும் அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. (இ)

உலக அமைதியை நிலைநாட்ட

## அணிசேரா நாடுகளின் பங்களிப்புக்குப் பாராட்டு!

நியூயோர்க், செப் 4
அணிசேரா நாடுகள் இயக்கத்தினர் 20 ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடுமுகமாக ஐ. நா வில் அங்கம்வகிக்கும் அணிசேரா நாடுகளின் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இதில் பேசிய அனைவரும் உலக அமைதிக்கு இந்நாடுகள் ஆற்றியுள்ள பங்கினை வெகுவாகப் பாராட்டிப் பேசினர். இவ்வியக்கத்தை உருவாக்கிய தலைவர்களுக்கு ஒரு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது. 96 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் ராஜதந்திரிகளும் எழுந்து நின்று மறைந்த அணிசேரா நாடுகளின் தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

நமது காலத்திய வரலாற்றில் அணிசேரா இயக்கம் உலக அமைதிக்குப் பெரும் பங்கு பணியாற்றியுள்ளது என ஐ. நா. பொதுச்செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் கூறினார்.

கடும் வல்லரசு போட்டிகள் நிலவிய காலத்தில் உலகநாடுகளைக் கெடுபிடிகளிலிருந்து காப்பாற்ற இவ்வியக்கம் பெரும் பங்களிப்பைச் செய்தது என்று பல உறுப்பினர்கள் பாராட்டினார்கள்.

## அமெரிக்க - சோவியத் பேச்சுவார்த்தை ஆரம்பமாகவேண்டும்

வாஷிங்டன், செப் 4
நியூட்ரன்குண்டை முழு அளவில் உற்பத்திசெய்ய றேகன் நிர்வாகம் எடுத்த முடிவுக்கு, செனட்டின் அயல் உறவுகளுக்கான கமிட்டியின் முன்னாள் தலைவர் திரு. வில்லியம் ஃபுல்பிரைட் கண்டனம் தெரிவித்துள்ளார்.

றேகனின் முடிவு, ஆயுதங்கள் மீது கட்டுப்பாடு விதிக்கும் முயற்சிகளை மோசமாகப் பாதிப்பதுடன், ஆயுதப் போட்டியை விரைவுபடுத்தவும் செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"நியூட்ரன்குண்டு உற்பத்தி பற்றிய பிரச்னைகள் பற்றியும் சோவியத்யூனியனுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தியிருக்க வேண்டும். இத்தகைய பேச்சுவார்த்தைகள், தப்பபிப்பிராயங்களைப் போக்கி, பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய இணக்கங்களை ஏற்படுத்தியிருக்கும்" என்றும் செனட்டர் ஃபுல்பிரைட் நம்பிக்கைதெரிவித்தார்.

ஈரான் ஜனாதிபதி, பிரதமர் படுகொலை

# பிரதமர் அலுவலக ஊழியர் கைது!

தெஹ்ரான், செ 4
ஈரானிய ஜனாதிபதியையும் பிரதமரையும் மற்றும் பலரையும் பலிகொண்ட குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக பிரதமமந்திரியின் அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுபற்றிய விபரங்கள் எதையும் வெளியிட ஈரான் அதிகாரபீடம் மறுத்தபோதிலும் விரைவில் இதுகுறித்து பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈரான் பிரதமரின் காரியாலயத்தில் ஆட்சிமன்றக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் ஜனாதிபதி ஜனுப் மொகமட் அலிரஜாயும் பிரதமமந்திரி மொகமட் ஜவாட் பஹோனரும் மற்றும் 15 பேரும் கொலைசெய்யப்பட்டது தெரிந்ததே. (இ)

### நியூட்ரன் குண்டு: இந்திய ஏடு கண்டனம்

புதுடில்லி, செப். 4
"மிகக் கொடூரத்தன்மை மிக்க ஆயுதமான நியூட்ரன் குண்டை முழு அளவில் உற்பத்தி செய்ய அமெரிக்க ஜனாதிபதி எடுத்த தீர்மானம், மனிதகுலம் முழுமையினதும் எதிர்காலத்துக்கும் பேரச்சுறுத்தலை ஏற்படுத்துவதாயுள்ளது" என்று இந்திய அரசு சார்பான 'நாஷனல் ஹெரால்ட்' பத்திரிகை எழுதுகிறது.

"அமெரிக்க நிர்வாகத்தின் இந்த ஆபத்தான நடவடிக்கைகளுக்கு சீனா அளித்துள்ள ஆதரவுக்கு இந்திய பொதுமக்களும் இதர ஆசிய நாட்டு மக்களும் பலத்த கண்டனம் தெரிவிக்கிறார்கள். பீகிங் நியூட்ரன் குண்டு ஒரு கொடுமையான ஆயுதம் அல்ல என்று கருதுகிறது" என்று இப் பத்திரிகை எழுதியுள்ளது.

### கிராம ஒன்றியம்

(கேலணை)
ஏழாலை கிராம ஒன்றியத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் வலி. தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் தலைமையில் ஏழாலை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு 78க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.


ஒன்றியத்தின் நடப்புவருட நிர்வாகிகள் வருமாறு:
தலைவர்: திரு. பா. வைத்திலிங்கம், உபதலைவர்: திரு. க. முத்துச்சாமி, செயலாளர்: திரு. த. திருஞானசம்பந்தர், பொருளாளர்: திரு. செ. இரத்தினம், உபசெயலாளர்: திரு. வ. மகாதேவன்.




மீண்டும் வந்துள்ளது

Pilot
BALL POINT

பைலட்
மத்தியதர
போல் பாயின்ட்



சிறப்பான எழுத்திற்கு
உகந்த பைலட்
எங்கும் பெற்றுக்கொள்ளலாம்

ரூ. 1/75

SRI COMMUNICATIONS

விற்பனையாளர்: ஷோ வொலஸ் அன்ட் ஹெஜஸ கொழும்பு 3. டெலிபோன்:- 20671 - 9

## இப்படியும் நடக்கிறது

முறையற்ற உறவினால் பிறந்த குழந்தைக்கு தாபரிப்புக்கோரி இளம் பெண் ஒருத்தி கண்டிப் பகுதியிலுள்ள நீதிமன்றமொன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

விசாரணை ஆரம்பமானது. ஒரு கட்டத்தில் பிரதிவாதியின் வழக்கறிஞர், பெண்ணைக் குறுக்கு விசாரணை செய்யத்தொடங்கினார்.

''வேறொரு ஆடவனுடன் நீர் தகாத உறவு கொண்டிருக்க வில்லையா ............?'' என்று கேட்டதுதான் கேட்டார்.........

சாட்சிக் கூண்டிலிருந்து ஒரே பாய்ச்சலில் தாவி, பிரதிவாதியின் கழுத்தைப் பிடித்துக் கொண்டு கழுத்தையே நெரிக்கத்தொடங்கி விட்டார் அந்தப்பெண்!

நீதிமன்றமே அமர்க்களப் பட்டுவிட்டது! போதாக்குறைக்கு அந்த நேரத்தில் பொலிஸாரும் அங்கு கடமையில் இருக்கவில்லை!

விலக்கிப்பிடிக்குமாறு நீதிமன்ற முதலியாருக்கு நீதிபதி உத்தரவிட்டார் பெரும் கஷ்டப்பட்டு முதலியாரும், பெண்ணின் பெற்றோரும் சேர்ந்து பெண்ணை இழுத்து அப்புறப்படுத்தினர், பிரதிவாதியோ...... ஒரே ஓட்டம். நீதிமன்றத்தை விட்டே ஓடிவிட்டார்!

விலக்குபிடித்த முதலியார்தான் பாவம்! அவருடைய 'கோர்ட்' கிழிக்கப்பட்டதோடு, அவரது கையையும் "சண்டைக்காரி" யின் பற்கள் பதம்பார்த்து விட்டன! எப்படி சங்கதி?

ஊடுருவி

# உலகில் யானைகள் அழியும் ஆபத்து!

### உயிரியல் நிபுணர் எச்சரிக்கை

லண்டன், செப். 4

இந்த நூற்றாண்டின் இறுதியில் யானை இனம் முற்றாக அழிந்துவிடும் என்று உலக உயிரியல் நிபுணர் ஒருவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

ஆசிய நாடுகளில் தற்போது 28 ஆயிரம் யானைகளும் ஆபிரிக்காவில் 13 லட்சத்து 43 ஆயிரம் யானைகளுமாக உலகில் 23 வகையான யானைகள் உள்ளன.

ஆபிரிக்காவில் உள்ள 32 நாடுகளில் 18 நாடுகளிலேயே யானைகள் உண்டு. இங்கு தந்தம் பெறுவதற்காக யானைகள் கொல்லப்படுகின்றன. ஆசிய நாடுகளில் காடுகளை அழித்து குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதால் யானைகள் அழிகின்றன. இதனால் நாளாந்தம் யானைகளின் தொகை குறைந்து கொண்டே போகின்றது.

[இ]

## அமைச்சர் 'சோமு' யோசனை

சென்னை, செப். 4

''இலங்கையில் தமிழ் மக்களுக்கு அண்மையில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களும், அனைத்துக் கட்சிகளும் அனுதாபம் தெரிவிக்க வேண்டும். இதுவே தேசிய ஒருமைப்பாட்டை எடுத்துக் காட்டும்.'' என்று தமிழ்நாடு வனுவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் தெரிவித்துள்ளார். (வெ)

# தம்பி வீட்டில் திருட்டு; அண்ணன் மீது சந்தேகம்

### சந்தேக நபர் எச்சரித்து விடுதலை

[மாவிட்டபுரம்]

தம்பியின் வீட்டில் கைவரிசை காட்டிய அண்ணனை மல்லாகம் பதில் நீதிபதி எச்சரிக்கை செய்து விடுதலை செய்தார்.

பன்னாலை வரத்தலம் என்னுமிடத்தைச் சேர்ந்த சிவானந்தஐயர் நடேசரத்தினசர்மா என்பவர் தமது வீட்டிலிருந்த 1200 ரூபா பெறுமதியான விவசாய தெளிகருவி திருடப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை பொலிஸில்புகார் செய்திருந்தார். விசாரணை செய்த பொலிசார் முறைப்பாட்டாளரின் அண்ணனிடமிருந்து திருடப்பட்ட தெளிகருவியை மீட்டதுடன் அவரையும் கைது செய்தனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு. கே. குணரத்தினம் முன்னிலையில் இவர் ஆஜர் செய்யப்பட்டபோது முறைப்பாட்டாளரினதும், எதிரியினதும் தந்தையான சிவானந்தஐயர் நீதிமன்றத்தில் சமூகமளித்து அண்ணன் தம்பி சண்டையைப் பெரிது படுத்தாது சமாதானமாக செல்லவிரும்புவதாகவும் இருவரும் அதற்கு சம்மதமென்றும் தெரிவித்தார்.

இந்நிலையில் காங்கேசன் துறைப் பொலிசார் சந்தேக நபரை திருட்டுக் குற்றத்தின் கீழ் கைது செய்து குற்றச்சாட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இதில் சமரசம் செய்ய முடியாது எனக்கூறினார்கள்.

பின்னர் பதில்நீதிபதி குற்றச் சாட்டைமாற்றி குறைந்த குற்றச்சாட்டாக தாக்கல் செய்யுமாறு பொலிசாருக்குக் கூற அவர்களும் அதை ஏற்றுக்கொள்ளவே இறுதியில் எச்சரிக்கை செய்து எதிர் விடுதலை செய்யப்பட்டார்.

## மரண அறிவித்தல்

### கனகரட்னம் தர்மராஜா

சங்கானையைச் சேர்ந்த ஜெயிலர் கனகரட்னம் தர்மராஜா காலமானார். இவர் மலேயன் பென்சனியர் காலஞ்சென்ற திரு. த. கனகரத்தினத்தினதும் திருமதி பொன்னம்மாவினதும் அன்பு மகனும், புலோலியைச் சேர்ந்த காலம் சென்ற ஆ. சுப்பிரமணியத்தினதும் திருமதி நாகரட்னத்தினதும் மருமகனும், வட இந்து மகளிர்கல்லூரி ஆசிரியை திருமதி இராஜலக்ஷ்மியின் அன்புக் கணவரும், திரு. க. நடராஜா (புறூனே), திரு. த. க. வில்வராஜா, திருமதி மனோரஞ்சிதம் சண்முகலிங்கம், திருமதி ராணி காலிங்கராஜா, திரு. க. குணராஜா [புறூனே], திரு. க. சிவராஜா ஆகியோரினது அன்புச் சகோதரரும் திரு. சு. சிவபாதசுந்தரம், திரு அ. சிவஞானசுந்தரம், திருமதி தனலக்ஷ்மி விக்னேஸ்வரன் ஆகியோரது அன்பு மைத்துனருமாவார். அன்னாரது பூதவுடல் சனிக்கிழமை 5-09-1981 பிற்பகல் 4 மணிக்கு 15/2, மெல்போன் அவெனியூ, பம்பலப்பிட்டியிலிருந்து ஈமைக்கிரியைகளிற்குப் பின் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

[0853]

# சிறை அதிகாரியிடம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாக இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இரு தரப்பினரும் சுமார் ஒரு மணித்தியாலமாக சட்ட விஷயமாக விவாதித்தனர்.

மேற்படி சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாதது குறித்தே விவாதம் நடைபெற்றது.

அரச தரப்பில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பகுதி பொலிஸ் உதவிக் கண்காணிப்பாளர் பிரேமச்சந்திரா, பொலிஸ் உத்தியோகத்தர் எம். பி ஆலிவ்வின் உதவியுடன் ஆஜரானார்.

சந்தேக நபர் வேலாயுதபிள்ளை தரப்பில் சட்டத்தரணிகள் ஆர் விஸ்வநாதன், எஸ். லோகேஸ்வரன், ரி சோமசுந்தரம் ஆகியோரும், சந்தேக நபர் இரகுநாதனின் தரப்பில் சட்டத்தரணி ஜிம்மிஇராசரத்தினம், சட்டத்தரணி ஐ. சூரியகுமாரனின் உதவியுடன் ஆஜரானார்கள்.

நேற்று பொலிஸ் உதவிக் கண்காணிப்பாளர் பிரேமச்சந்திரா இந்த வழக்கின் தொடர் அறிக்கையை மன்றில் சமர்ப்பித்து 1979-ம் ஆண்டின் 48-ம் இலக்க பயங்கரவாத தடுப்புக்கட்டளை தற்காலிக பிரிவு 9 (1) பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக் கட்டளையின் நிமித்தம் பிஸ்கால் பாதுகாப்பிலிருந்த சந்தேக நபர்கள் இருவரும் தடுப்புக்காவல் முகாமுக்கு எடுத்துச் சென்றுள்ளதாக கூறினார்.

சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன்: சந்தேக நபர் வேலாயுதபிள்ளை 28-8-81-ந் திகதி கைது செய்யப்பட்டு நீதிபதி முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டு நீதிபதியின் கட்டளைப்படி 4-9-81 திகதி வரை யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவர் விளக்க மறியலில் இருக்கின்ற பொழுது மன்றின் அங்கீகாரம் பெறாமல் அவரை தடுப்புக்காவல் கட்டளை சட்டத்தின்கீழ் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து கொண்டு போயிருக்கின்றார்கள். அவ்வாறு கொண்டுபோனவர்கள் மன்றுக்கு அறிவிக்காமல் கொண்டுபோனதை நான் வன்மையாக ஆட்சேபிக்கின்றேன். வேலாயுதபிள்ளை மன்றின் பாதுகாப்பில்தான் இருந்திருக்கின்றார் வேலாயுதபிள்ளைய பொய்ச்சாட்சியம் சிருஷ்டித்ததாக இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 192ஒ பிரிவின்கீழ் குற்றம் சாட்டி மன்றின் முன்னிலையில் ஒப்படைத்ததாக அறிகின்றோம். அத்தகைய சந்தேக நபரை, சிறைச்சாலை அதிகாரி மன்றுக்கு அறிவிக்காமல் பாதுகாப்பு மந்திரியின் கட்டளையின்படி இராணுவத்தினரிடம், ஒப்படைத்தது மன்றை அவமதித்ததாக நான் கருதுகின்றேன்.

நீதவான்: மன்றில் அணைக்கப்பட்ட தொடர் அறிக்கையின்படி சந்தேக நபர்கள் பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டதாகத் தடுப்புக் காவல் முகாமுக்கு பாதுகாப்பு அமைச்சரின் கட்டளைப்படி எடுத்துச் செல்லப் பட்டிருக்கின்றார்கள்.

சட்டத்தரணி ஆர். விசுவநாதன்: சந்தேக நபர் வேலாயுதபிள்ளையை மன்றின் அனுமதியில்லாமல் சிறைச்சாலையிலிருந்து எடுத்துச்செல்ல சட்ட நிதி இருக்கிறதா என்பதை மன்றிடம் தாழ்மையாகக் கேட்கிறேன்.

பொலிஸ் உதவிக் கண்காணிப்பாளர் திரு பிரேமச்சந்திரா; 1979ம் ஆண்டின் 48ம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் 9 (1)ன் கீழ் பாதுகாப்பு அமைச்சர் சந்தேக நபர்கள் எங்கிருந்தாலும் அவர்களை தடுப்பு முகாமுக்கு எடுத்துச் செல்வதற்கு உத்தரவிட அதிகாரம் உண்டு நீதிமன்றத்தின் பாதுகாப்பில் இருக்கின்ற சந்தேக நபர்களை எடுத்துச் செல்வதற்கு அதிகாரம் உண்டு என்பதை சட்டத்தில் வெளிப்படையாகக் கூறாவிடினும் எனது அபிப்பிராயத்தின்படி. பாதுகாப்பு அமைச்சரின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு சிறைச்சாலை அதிகாரிக்கு அதிகாரம் உண்டு. ஆகையால் இவ்விடயத்தில் சிறைச்சாலை அதிகாரி தவறுஏதும் செய்தார் என்று கூறுவதற்கு எதுவுமில்லை.

சட்டத்தரணி ஜிம்மி இராசரத்தினம்:

மன்றில் சமர்ப்பித்த மூல அறிக்கையின்படி. சந்தேக நபர்கள் பொய்ச்சாட்சியத்தை சிருஷ்டித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். இது ஒரு மூலாதாரமான விடயம். இந்தக் குற்றச்சாட்டிலிருந்து முற்றிலும் வேறான ஒரு விடயத்தை இப்பொழுது தொடர் அறிக்கை மூலம் மன்றில் சமர்ப்பிக்க முடியாது. பாதுகாப்புக்கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைச்சர் சந்தேக நபர்களை, அவர்களை மன்றுக்குக் கொண்டு வருவதற்கு முன்பு தடுப்புக்காவலில் வைக்கும்படி கட்டளையிடலாம். பாதுகாப்புக்கட்டளைச் சட்டத்தில் நீதிமன்றின் பாதுகாப்பில் இருக்கின்ற சந்தேக நபர்களை தடுப்புக்காவலில் வைக்கலாம் என்று குறித்த தடுப்புக்காவல் கட்டளை சட்டத்தில் கூறப்படவில்லை. அவ்வாறு பாதுகாப்பு அமைச்சர் கட்டளையிட அந்தச் சட்டம் அதிகாரம் அளிக்கவில்லை. அந்தச்சட்டம் நிறைவேற்றுகின்ற பொழுது பாராளுமன்றம் அந்த நோக்கத்தை கொண்டிருந்தால் அந்த விடயத்தை தெட்டத்தெளிவாக சட்டத்தில் எடுத்துக் கூறியிருக்கும் பாதுகாப்பு அமைச்சர் மன்றின் பாதுகாப்பிலிருந்து எடுத்துச்செல்லும்படி கட்டளையிட்டிருந்தால் அது சட்டவிரோதமாகும், அமைச்சர் கட்டளையை மீறியுள்ளார்

நீதவான்; சட்டமா அதிபருடன் ஆலோசனை செய்து விளக்கம் அளிப்பதற்கு ஒரு வாரகால அவகாசம் கொடுக்கிறேன். அத்துடன் சிறைச்சாலை அதிகாரி குறித்த இரு சந்தேக நபர்களையும் இன்று மன்றில் ஏன் ஒப்படைக்கவில்லை என்பதற்குக் காரணம் காட்டுவதற்கு அவருக்கு அறிவித்தல் அனுப்பும்படி கட்டளையிடுகிறேன்.

வழக்கு இம்மாதம் 14ம் திகதி வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

[மா]

## புதுச்சேரியில் ஹர்த்தால்

சென்னை, செப். 4

இலங்கையில் தமிழ்மக்களுக்கெதிராக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட வன்செயல்களுக்கு அனுதாபம் தெரிவித்து புதுச்சேரியில் இன்று அனைத்துக் கட்சிகளினதும் ஹர்த்தால் நடைபெற்றது.

ஹர்த்தாலை யொட்டி இன்று புதுச்சேரியில் பாடசாலைகளும், கடைகளும், அரசாங்க, தனியார்துறை அலுவலகங்களும் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## எழுதுமட்டுவாளில் பலியானவர் ஒரு விவசாயி

[யாழ்ப்பாணம்]

எழுதுமட்டுவாளில் நடந்த தாக்குதல் சம்பவத்தில் விஜசிகுணரத்தினம் (23 வயது) என்ற இளைஞர் பலியானார்.

திருமணமாகாத விவசாயியான இவர் தோட்டத்திலிருந்து திரும்பி வரும்போது இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

ஆயுதங்களுடன் வந்த கோஷ்டியொன்று அவரைத் தாக்கியதாக கூறப்படுகிறது. பொலிசார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## பத்திரிகையாளர் செல்லத்துரை சுகவீனம்

[யாழ்ப்பாணம்]

''வீரகேசரி'' பத்திரிகையின் யாழ்ப்பாண நிருபர் திரு. எஸ். செல்லத்துரை, சுகயீனம் காரணமாக நேற்று கொழும்பு சென்றுள்ளார்.

கடந்த ஒருமாத காலமாக சுகவீனமுற்றிருந்த அவர் கொழும்பில் தனியார் மருத்துவ மனையொன்றில் சிகிச்சை பெறுவார்.

## 5பொலிஸ் நிலையங்களும் நிரந்தரமாக மூடப்படும்!

[கொழும்பு]

ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தாக்குதலைத் தொடர்ந்து தற்காலிகமாக மூடப்பட்ட ஆனைக்கோட்டை, சங்கானை, குருநகர், கோப்பாய், பூநகரி, பளை ஆகிய பொலிஸ் நிலையங்களை நிரந்தரமாக மூடிவிடுமாறு பொலிஸ் மா அதிபர். திரு. அனு செனவிரத்ன வட பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. ஏ. நவரத்தினத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

இப்பொலிஸ் நிலையங்கள் மூடப்படும் அதே வேளையில் இவைதொடர்ந்தும் ராணுவ முகாம்களாகப் பாவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

[இ]

இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 889, 8186.